ISSN:2582-9599



# சங்க இலக்கியத்தில் நாடகம்

முனைவர் கு. பத்ம பிரியா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எம்.ஒ.பி. வைணவ மகளிர் கல்லூரி, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034. padmapriyagopu@gmail.com

31

**ஆய்வுச் சுருக்கம்:**

நாடு+அகம் = நாடகம். அகத்தை நாடுதல் நாடகமாகும். பண்டைக்கால முதலே தமிழ் மொழியில் இயல், இசை, நாடகம் எனும் முப்பிரிவுகள் இருந்து வருவதை "முத்தமிழ்" என்னும் வழங்கு நமக்குத் தெளிவுற உணர்த்தும். இயலும், இசையும் இணைந்து கதை தழுவி வரும் கூத்து, "நாடகம்" எனப்பட்டது. நாடகத் தமிழ் என்பது தமிழ் மொழிக்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்த பிரிவாகும். இயலும் இசையும் செவிக்கு மாத்திரம் இன்பம் தர, கூத்து என்னும் நாடகம் செவியோடு கண்ணிற்கும் இன்பம் தந்து நிற்கின்றது. எனவேதான் இந்நாடகக் கலை, "கலைக்கரசு" என்று போற்றப்படுகின்றது. இலக்கியங்களில் இந்நாடகம் குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ள விதத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**முன்னுரை:**

தொல்காப்பியத்தில் "நாடக வழக்கினும்," "உலகியல் வழக்கினும்" என்று வரும் தொடர்களைக் கொண்டு நாடகத்தின் பழமையை அறியலாம். சங்கப்பாடல்களில் அகப்பாடல்கள் அனைத்துமே நாடகக் கூற்றாக வருவதால் அவற்றை நாடகத் தனிநிலைச் செய்யுட்கள் (Dramatic Monologues) என்றும் கூறுவர். பண்டைத் தமிழகத்தில் நாடக நூல்களும் நாடகத் தொழில்களும் தமிழரிடம் இருந்து வந்துள்ளன. பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் நாடக இலக்கியங்களைக் கலிப்பாவிலும், பரிபாடல்களிலும் இயற்றியள்ளனர். நாடகம் குறித்த பதிவுகள் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள தன்மையினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**திறவுச்சொற்கள்:**

கூத்து, நாடகம், அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, பரிபாடல், அரங்கு, கூத்தராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை.

**கூத்து – நாடகம்:**

நாடகம் என்ற சொல் வருவதற்கு முன்னரே கூத்து என்ற சொல்லால் இக்கலை வழங்கப்பட்ட வந்தது. முதன்முதலில் நாட்டியமும், நாடகமும் ஒன்றாக இணைந்தே இருந்தன. தனிப்பாடல்களுக்கு அபிநயம் பிடித்தலை நாட்டியம் எனவும், கதையைத் தழுவி வேடமிட்டு ஆடுதலை நாடகம் என்று கூறி வந்தனர். இரண்டுமே கூத்து என்னும் பொதுப் பெயரால் வழங்கி வந்தன. கூத்து அல்லது நாடகத்திற்குப் போலச் செய்தல் (imitation), மற்றும் விளையாட்ட உணர்ச்சியே மூலமாக அமைந்தது. விளையாட்டாகத் தோன்றிய இக்கலை இன்றும் ஆங்கிலத்தில் "Play" என்றே வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கூத்துக் கலையில் முதலில் மரத்தலாகிய பொம்மைகளையும் துணி மற்றும் தோலால் ஆகிய பொம்மைகளையும் கொண்டு நிகழ்ச்சிகளை நிகழத்தி வந்தனர். இவை மரப்பாவைக் கூத்து,

பொம்மலாட்டம், தோல்பாவைக் கூத்து என்று வழங்கி வந்தன. பிறகு உயிருள்ள மாந்தர் வேடமிட்டு ஆடத் தொடங்கினர். இவ்வாறாக, முதலில் வெறும் கூத்து என்ற நிலையிலிருந்து நாட்டியமாகி, பின்னர் நாட்டிய நாடகமாக வளர்ந்து, தற்போது நாடகம் என்று கலையாகச் செழித்து நிற்கின்றது.

**சேக்ஸ்பியரும் முதுகண்ணன் சாத்தனாரும்:**

"உலகம் ஒரு நாடக மேடை" என ஆங்கில் நாட்டுப் பெருங்கவிஞர் சேக்ஸ்பியர் கூறியிருப்பதை வியந்து அறிஞர்கள் பாராட்டுகின்றனர். அவர் இப்பரந்த உலகத்தை ஒரு நாடக மேடையாகவும் அதில் வரும் ஆடவர்களையும் மகளிரையும் நாடக நடிகர்களாகவும் கற்பனை செய்து கூறியிருப்பதைப் புகழ்வார். ஆனால் இதே கருத்தை சேக்ஸ்பியருக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் சோழன் நலங்கிள்ளியை நோக்கி,

"………………………………………………விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியும் இவ்வுலகத்து" (புறம்.29)

எனப் பாடுகின்றார்.

**அகநானூறு:**

நாடகக் கலையும் நாட்டியக் கலையும் சங்க காலத்தில் எத்துணை வளம் பெற்றிருந்தன என்பதற்கு அக்காலத்து எழுந்த பாடல்கள் சான்று பகர்கின்றன. பிரிந்தாரிடையே நிகழ்ந்து வந்த நாடகங்கள் ஓர்புறம் இருக்க இயற்கைக் காட்சிகளிடையே நடந்த நாடகக் காட்சியொன்றினைச் சித்தரிக்கின்றது அகநானூற்றுப் பாடல்.

"கழைவளர் அடுக்கத்து இயிலி யாடுமயில்
விழவுக்கள விறிலியற் றோன்றுநாடன்" (அகம்.82)

கழைவளர் அடுக்கத்தில் ஆடும் மயில், நடன அரங்கில் ஆடும் விறலியை நினைவூட்டுகின்றதாகக் கபிலர் கூறுகின்றார். தாம் கண்ட நாட்டியக் காட்சியை இயற்கைப் பொருள்களிலும் வைத்துக் புலவர் காணுகின்றார் என்றால் அக்காலத்தில் நாடகக் கலை சிறந்து விளங்கியதை அறியமுடிகின்றது.

**பரிபாடல்:**

பாணரும் கூத்தரும் விழாக் கொண்டாடி ஆடல் பாடல் நிகழ்த்திய செய்திகள் பரிபாடலில் கூறப்படுகின்றன. ஆடல் அரங்குகள் இடம் பெற்றுள்ள செய்தியை,

"படுகண் இமிழ்காளை பயின்றனர் ஆடும்
களிநாள் அரங்கின் அணிநலம் புரையும்" (பரி.16.12-13)

என்ற பரிபாடல் வரிகளால் அறிகிறோம். மேலும் இசைவல்லோர் இசை வல்லாரோடு போட்டியிடுகின்றனர். கூத்தர்கள் கூத்தரோடு போட்டியிட்டு ஆடுகின்றனர். இதனை,

"ஆடல் நவின்றோர் அவர்போர் செறுப்பவும்
பாடல் பயின்றோர் பாணர் செறுப்பவும்" (பரி.9.72-73)

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன. கூத்துக்கள் வளர வளர ஆடரங்குகள் தோன்றிய செய்தியை மட்டுமன்றி ஆடரங்குகளில் போட்டிகள் நிகழும் அளவுக்குக் கலைவளரத் தொடங்கிய செய்தியையும் அறிகிறோம்.

**புறநானூறு:**

அல்லிப்பாவை என்னும் ஓர் கூத்து, புறநானூற்றில் சுட்டப்படுகின்றது. இது அல்லியம் என்ற கூத்தாக இருக்க வேண்டும் எனக் கருதுவர். இது பாவைக் கூத்து வகையைச் சார்ந்தது.

"வல்லோன் தைஇய வரிவனப் புற்ற
அல்லிப் பாவை ஆடுவனப் பேய்ப்ப" (புறம்.33)

அல்லிப்பாவை ஆடுவனப்பு என்றது ஆண் கோலமும் பெண் கோலமுமாய் அவ்விருவரும் ஆடுங்கூத்தாகும் இவ் அல்லிப்பாவைக் கூத்து. இவ் அல்லிப்பாவைக் கூத்து, மேலும் கூத்தர்கள் கூத்தாடுவதற்கெனத் தனிப்பட்ட "ஆடுகளங்கள்" இருந்தன என்பதை

"கூத்தர் ஆடுக்கடுக்கும் அகநாட்டையே" (புறம்.28)

என்ற புறநானூற்று வரிகள் உணர்த்துகின்றன.

**கூத்தாற்றுப்படை (மலைபடுகடாம்) :**

பத்துப்பாட்டின் இறுதிப் பாடலாகிய மலைபடுகடாம், "கூத்தராற்றுப்படை" என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

கூத்தர்கள் தம் குழுவினருடன் ஊர் ஊராகச் சென்று கூத்துகள் நிகழ்த்துவர். அவ்வாறு செல்லுங்கால் தமது இசைக்கருவிகளையும் பிறவற்றையும் பைகளில் கட்டிக் கொத்தாக மூங்கில் கால்களில் மாட்டித் தூக்கிச் செல்வரெனவும், அத்தோற்றம் ஒரே கிளையில் கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்கும் பலாக் காய்களை நினைவூட்டுதாக இந்நூலாசிரியர் கூறுகிறார்.

"நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்" (மலைபடு.11-13)

என்ற இவ்வடிகளோடு,

"பண்ணமை முழுவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொரு சுருக்கிக்
காவிற் றகைத்த துறைகூடு காப்பையர்" (பதிற்.41.3-5)

என்னும் பதிற்றுப்பத்துப் பாடலின் அடிகள் மலைபடுகடாம் அடிகளுக்கு வலு சேர்க்கின்றன.

**பெரும்பாணாற்றுப்படை:**

"வாடாவள்ளி" எனத் தொல்காப்பியத்தில் சிறப்பிக்கப்பட்ட வள்ளிக்கூத்து, பல சிற்றூர்களிலும் நடத்தப்பட்டு வந்ததென்ற குறிப்பு, பெரும்பாணாற்றுப்படையில்,

"வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடு பல கழிந்த பின்றை" (பெரும்பாணா.370-371)

என குறிப்பிடுகின்றது.

நாடகம் ஆடும் பெண்களை "நாடக மகளிர்" எனவும் அவர்கள் கூத்தாடுமிடத்தை "ஆடுகளம்" எனவும் குறிப்பிடும் செய்தியை,

"நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த

விசிவீங் கின்னியம் கடுப்ப“ (பெரும்பாணா.55-56)

இவ்வடிகள் மூலம் அறியமுடிகின்றது.

**பட்டினப்பாலை:**

கரிகால் பெருவளத்தான் மீது உருத்திரங் கண்ணனார் பாடிய பாட்டினப் பாலையில்,

”பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்”

எனவரும் குறிப்பினால், அக்காலத்தில் நாடகக் கலை சிறப்புற்று விளங்கியமையை அறிய முடிகின்றது.

**கலித்தொகை:**

சங்க இலக்கியங்களில் நாடகக் கூறுகள் நிரம்பிய நல்லதொரு இலக்கியம் கலித்தொகையாகும். ஒவ்வொரு பாடலும் ஓர் ஓரங்க நாடகம் போல் அமைந்துள்ளது. ஓரங்க நாடகத்திற்கு வேண்டிய ஒரு நிகழ்ச்சி வருணனை, நிகழ்ச்சித் தொடர்ச்சி, கருத்து, கதை, உரையாடல், உணர்ச்சிப் போராட்டம் எல்லாம் கலித்தொகைப் பாடல்களில் நிறைந்துள்ளன. குறளனும் கூனியும் உரையாடும் மருதக்கலியின் 76 ஆவது பாடல் நாடகப் பாங்கிற்கு சிறந்த எடுத்துகாட்டாகும்.

**முடிவுரை:**

சங்க கால மக்கள் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்ததை சங்க இலக்கிங்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன. நாடகம் அக்காலகட்டத்தில் கூத்து என பெயரில் அழைக்கப்பட்டதையும், கூத்தினை ஆடும் கலைஞர் கூத்தர்கள் எனப்பட்டனர். கூத்தினைப்பற்றியும், கூத்தர்கள் குறித்தும், அவர்கள் கூத்து நிகழ்த்தும் இடமான அரங்கம் குறித்தும் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளதை எடுத்தியம்பியது இக்கட்டுரை.

**துணைநூற்பட்டியல்:**

1. அழகப்பன்.ஆறு.முனைவர், தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், முதற் பதிப்பு. 1987, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
2. அலிஸ். அ. முனைவர்.,(உரை), கலித்தொகை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.
3. ஆலிஸ். அ. முனைவர்.,(உரை), பதிற்றுப்பத்து (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.
4. பாலசுப்பிரமணியன். கு. வெ. முனைவர்., (உரை), புறநானூறு (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.
5. மோகன்.இரா.முனைவர்., (உரை), பத்துப்பாட்டு (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.
6. ஜெயபால்.இரா.முனைவர்., (உரை), அகநானூறு (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.